# மாதர்மனோரஞ்சினி.

VOL. 1. | MADRAS: OCTOBER, 1899. | NO. 8.
புத்த. க. | சென்னப்பட்டணம்: 1899-ஞு அக்டோபர்-மீ | இல. அ


## கதாசரித்சாகரம் என்னும் வித்தியாதரக்கதை.

---

### குழந்தைகள் தகப்பனைக் கதை சொல்லும்படி கேட்பது.

குழந்தைகள்:—அப்பா வெகுநாளாக கதை சொல்லுகிறேன், கதைசொல்லுகிறேன் என்று ஏமாற்றிக்கொண்டு வருகிறீரே இது உமக்கு நியாயமா?

தகப்பன்:—என் அருமைக் குழந்தைகளே? எனக்கு சாவகாசமில்லாததினால் இது வரையில் நான் உங்களுக்கு கதை சொல்லவில்லை. நான்பல வேலைக்காரனா யிருக்கிறபடியால் இப்போதும் எனக்கு அவகாசமில்லை, ஆனாலும் ஒரு நல்லகாரியத்தைச் செய்ய விருப்பங் கொண்டால் அதை உடனே செய்ய வேண்டும். நாளைக்குப்பார்ப்போம், நாளைக்குப்பார்ப்போம் என்று தள்ளிவைத்தால் கடைசியில் அந்த காரியமும் முடிகிறதில்லை. இதர காரியங்களிலும் நன்றாக மனது செல்லுகிறதில்லை; ஆகையால் நான் உங்களுக்குச் சொல்லியிருக்கிறபடி கதை சொல்லுகிறேன். கவனமாய் மாத்திரம் கேட்கவேண்டும்.

குழந்தைகள்:—என்னப்பா இப்படிச் சொல்லுகிறீர்களே. "கரும்புதிங்க கூலி வேண்டுமா" நாங்கள் தான் கதை எங்கே கதை எங்கே என்று காத்திருக்கிறோமே. நாங்கள் கதையை கவனியாமலிருப்போமா.

தகப்பன்:—அப்படி ஆனால் சரிதான். வெகுசந்தோஷமாச்சுது. நாம் ஒய்ந்து உட்கார்ந்திருக்கும் இராக்காலமும், குளுகுளு வென்று வீசும் மந்தமாருதமும், குயில் கூவும் வசந்த சமயமும், பட்டப்பகல் போல் பளிச்சென்று வீசும் நிலவும், கூக்குரலில்லாத கிராமாந்தரமும், ஆவலுடன் கேட்கும்குழந்தைகளுமிருந்தால் கதை சொல்லப்பிரியமில்லாதவனுக்கும் கூட கதை சொல்ல புத்தியுண்டாகுமே; இப்போர்ப்பட்ட

சமயம் பின்னால் நேர்ந்தாலும் நேரும். இல்லாமற் போனாலும் போக லாம். ஆகையால் "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்கிற சொற்படி இப்பொழுதே சொல்லத் தொடங்குகிறேன், கேளுங்கள்.

குழந்தைகள்.—அப்பா, தயவுசெய்து நாங்கள் சொல்வதை கேளுங்கள். தமிழ்க்கதைகளையும், இங்லீஷ் கதைகளையும் அநேகந்தடவை நாங் கள் கேட்டிருக்கிறோம், அப்பேர்ப்பட்ட கதைகள் எங்களுக்கு வேண்டாம். கேட்டவைகளைக் கேட்டால் அலுத்துப்போம். ஆகை யால் புதிதான கதைகள்தான் எங்களுக்கு வேண்டும். உங்களுக்குத் தான் சமஸ்கிருதம் தெரியுமே. அப்பாஷையில் எவ்வளவோ வேடிக் கையான கதைகளை வாசித்திருப்பீர்களே அதிலிருந்து விநோதமான கதைகளைச்சொல்லுங்கள்.

தகப்பன்:—கண்மணிகளே! சம்ஸ்கிருதத்தில் கதைகளா கிடையாது, அவை களை ஒருவரும் சிரத்தையாய் சொல்லுகிறதுமில்லை. ஒருவரும் ஆவலுடன் கேட்கிறதுமில்லை. உங்களைப் போலொத்த குழந்தை களுக்கு வேணுமென்றே அநேக கதைகளை முன்னோர்கள் எழுதிவை த்திருக்கிறார்கள். நானும் சாவகாசமிருந்தபொழுது அவைகளில் அநேகங்கதைகளை வாசித்து வைத்திருக்கிறேன். அவைகளில் உங் களுக்குப் பிரியமானதைச் சொல்லுகிறேன்.

குழந்தைகள்.—அப்பா ! நீங்கள் வாசித்திருக்கிற சில கதைகளின் பெய ரைச் சொல்லுங்கள். பிறகு நாங்கள் எங்களுக்குப் பிரியமான கதை யைப் பொறுக்கிச் சொல்லுகிறோம்.

தகப்பன்:—குழந்தைகளே! கேளுங்கள். பஞ்சதந்திரம், ஹிதோபதேசம், ஸஹஸ்ரமுகராவணன்கதை, சுகசப்ததி, விக்கிரமார்க்க சரித்திரம், கதாசரித் சாகரம் என்கிற சில கதைகள் எனக்குத்தெரியும். இவைக ளில் உங்களுக்கு எந்தக்கதை வேண்டியதோ அதைச் சொல்லுங்கள் சொல்லுகிறேன்.

தேவன்:—அப்பா! ஹிதோபதேசத்தையும், விக்கிரமார்க்கன் சரித்திரத் தையும் நாங்களே தமிழில் வாசித்திருக்கிறோம். மேலும் அப்பா வருஷந்தோறும் மெட்ரிகுலேஷன் பரிக்ஷைக்குப் பாடம்வைக்கிற கதைதானே பஞ்சதந்திரம். அதில் சில கதைகளை உபாத்தியாயர் மூலமாய் கேட்டிருக்கிறோம்.

ஜானகி:—ஆனல் சரி மூன்றுகதைகள்தானே அப்பா மிச்சம்! இவைகளின் சமாசாரம் எங்களுக்குத் தெரியாது, ஆனாலும் கதாசரித்சாகர மென்னும்பெயரை கேட்கும் போதே அது வெகுநன்றாகவிருக்கும் போல் தோன்றுகிறதே. ஆகையால் அந்தக்கதையை தயவு செய்து எங்களுக்குச் சொல்லவேண்டும் அப்பா!

தகப்பன்:—அம்மா ஜானகி நீ வெகு புத்திசாலி! இந்த மூன்று கதைகளில் ஸஹஸ்ரமுக இராவணன்கதையும் சுகசப்ததியும், சின்னகதைகள். கதாசரித்சாகரமோ பெரிது. முன்சொல்லிய இரண்டுபுஸ்தகங்களின் கதைகள் கதாசரித்சாகரத்தின் கதைகளைப்போல அவ்வளவு மதுரமாயிராது. மேலும் கதாசரித்சாகரத்தின் கதைகளைத் தெரிந்து கொண்டால் சம்ஸ்கிருதத்திலிருக்கும் அநேக நாடகங்களின் கதைகள் தெரிந்துவிடும். ஏனென்றால் சம்ஸ்கிருத கவிகளில் அநேகர் இக்கதாசரித்சாகரத்தின் சில கதைகளையே நாடகங்களாகவும் ஆக்கியாயிகைகளாகவும் (Novels) இயற்றியிருக்கிறார்கள். ஆனதால் ஜானகியின் இஷ்டப்படி கதாசரித்சாகரத்தையே சம்ஸ்கிருதத்திலிருக்கிறபடி உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் அவசரப்படாமல் கவனமாய்க் கேளுங்கள்.

குழந்தைகள்:—அப்பா அப்படியே ஆகட்டும். ஆரம்பியுங்கள் சீக்கிரம்.

தகப்பன்:—ஆரம்பித்துவிடுகிறேன். விக்கினமில்லாமல் முற்றிலும் கதை சொல்லி முடியவேண்டும். அதற்காக ஈசனை தியானித்துக் கொள்ளுங்கள்.

குழந்தைகள்:—சாமி ஆண்டவனே இடையூறில்லாமல் கதை முடியவேண்டும்; அப்பாவுக்கும் சவாகாசமிருக்கவேண்டும். அப்பா நாங்கள் ஈசனை தியானித்துக் கொண்டாச்சுது நீங்கள் தியானித்துக் கொள்ளுங்கள்.

தகப்பன்:—குழந்தைகளே அவ்விதமே செய்கிறேன். விக்னேஸ்வரனுக்கு தந்தையாகிய பரமசிவனே: நான் அபூர்வமான கதையைச் சொல்ல யத்தனிக்கிறேன்; இடையூறில்லாமல் முடியும் படிக்கு கிருபை செய்யவேண்டும்.

குழந்தைகள்.—அப்பா ஆரம்பியுங்களேன்.

தகப்பன்.—அப்படியே செய்கிறேன்.

பாலாம்பாள்:—அப்பா இதற்கு ஏன் கதாசரித்சாகர மென்று பேருண்டாயிற்று? இதைச் செய்தவர் யார்? செய்தவரின் இருப்பிடம் ஏது?

எப்பொழுது செய்தார்? எதற்காகச் செய்தார்? இவைகளை விவரமாய் எங்களுக்குச் சொல்லுங்கள்.

தகப்பன்:—உன்னுடையகேள்விகளும் எல்லாரும் மெச்சத்தகுந்தவைகளே. அநேக ஆறுகள் சமுத்திரத்தில் எவ்விதம் கலக்கிறதோ அவ்விதமே இதில் அநேக உள் கதைகளடங்கி யிருக்கின்றன. ஆகையால் இப்புஸ்தகத்துக்கு கதாசரித்சாகரமென்று பெயர் வழங்கிவருகிறது. இதை **சோமதேவன்** என்ற வித்வான் இயற்றினர். இவர் காஸ்மீர தேசத்தில் பிறந்தவர். அந்த காஸ்மீர தேசத்தில் **சூரியவதி** என்ற மகாராணியார், தனது பேரனை **ஹர்ஷதேவன்** மரணமடைந்ததினால், அதிக வருத்தப்பட்டுக்கொண்டிருந்தாள். அம்மகாராணியின் துயரத்தை நீக்கும் பொருட்டு இக்கதையை அம்மகாராணியாருக்கு கி. பி. 1125வதில் சொன்னர். குணாட்டியன் பைசாச பாஷையி லியற்றியிருந்த பிருஹத் கதையை இவர் சுருக்கி சமஸ்கிருத பாஷையில் எழுதி **கதாசரித்சாகரம்** என்று பெயரிட்டார். இந்த கதை பதினெட்டு புஸ்தகங்களாக எழுதப்பட்டிருக்கிறது. இதில் முதல் புஸ்தகத்திற்கு "கதாமுகம்", என்று பெயர்; இக்கதாமுகத்தைக் கேட்டால் **கதாசரித்சாகரத்தின்** வரலாறு தெரியவரும்.

(இன்னும்வரும்).

**என். சாமிநாத சாஸ்திரியார்.**

---

## அசலாம்பாள்.

**ஓர் இளம் கவிராணி.**

இப்போது, தென் ஆர்க்காட்டில் திண்டிவனத்துக்குச் சமீபத்திலுள்ள இரட்டணை என்னும் ஊரில் வடமப்பிராமண குலத்திற்றோன்றிய ஒரு **மதுரகவிமாது** இருக்கிருள். வயது 22, பெயர் அசலாம்பாள். சிறுவயதில் கலியாணமாகிக் கணவனை யிழக்கும் துர்ப்பாக்கியத்தை யடைந்தவள். இவள் தன்னூருக் கருகிலுள்ள சேலூர் என்று வழங்கும் திருவிடையூர்த் தலபுராணத்தைத் தமிழ் விருத்தக் கவிகளிற் செய்திருக்கிருள். இன்னும் ஒரு வாரத்துக்குள் மேற்படி தலத்தில் தமிழ்ப் பண்டிதர்களை யெல்லாம்

ஓர் சபை கூட்டி, அச்சபை நடுவில் வீற்றிருந்து தன் பிரபந்தத்தை அரங்கேற்றல் செய்யப்போகிறாளாம்.* அப்பிரபந்தத்தை இப்போது பதிப்பில் நாம் பார்த்ததில், செய்யுளில் தெற்றெனவிளங்கும் பாண்டித்தியம், அபரிமிதமான வியப்பை உண்டாக்குகிறது. நம் கையில் வந்திருக்கும் பிரதி, பதிப்போர் பிழைதிருத்தம், கடைநோக்கம், ஆசிரியர் பிழைதிருத்தம், கடைநோக்கம் என்னும் இரண்டு பரிசோதனைகளில் ஒன்றிற்குக்கூட இன்னும் முற்றிலும் உள்ளாகவில்லையென நன்குவிளங்குவதால், பிரபந்தத்தின் குணகுணங்களை ஸவிஸ்தாரமாய் எடுத்துப் பேசுவதற்கு இது தருணமல்ல. நிற்க, நம் ஜனங்களின் தற்கால ஆசார சுபாவங்களை நோக்குங்கால், இப்பெண்ணுக்கு லபித்த துர்ப்பாக்கியமே இத்தகையபாண்டித்தியம் அடைவதற்கு இன்றியமையாத உதவியா யிருந்திருக்கிறதென்று சொல்லவேண்டும். ஏனெனில், தெய்வம் வரங்கொடுத்தும் பூசாரி வரங்கொடுக்கவில்லை யென்பதுபோல, இயற்கையான சக்தியிருந்தும், சமயப்பிரதிகூலத்தாலும், மனுஷ்யாள் பிரதிகூலத்தாலும் பிரபலிக்க வழியின்றித் தேய்ந்து மாய்ந்து போயிருக்கும் கவிமாதுகள் சிலரை நாம் அறிவோம். ஆகையால் முக்கியமாய்ப் பெண்களுக்கு இயற்கையிற் பொருந்திய நற்றொழில்களில் ஒன்றாகிய கவிதையில் இவ்வாறு இம்மாது முன்வந்திருப்பது இப் பரதகண்டத்தின் க்ஷேமத்தை நாடும் சகலருக்கும் வியப்பையும் ஆனந்தத்தையும் தரத்தக்கது. இந்தச் சுவிசேஷம் வெளிவந்த நாள் நமக்குள் ஒரு பெருத்த சுபதினமாகக் கொண்டாடற் கொத்தது.———சுதேசமித்திரன்.

## மரகதவல்லி, சுந்தரவல்லி சரித்திரம்.

(முன்தொடர்ச்சி.)

சபையில் முதலில் சில சட்டங்களை வாசித்தார்கள். புண்ணியசீலன் அச்சட்டங்களின் பிரயோஜனத்தையும் அவற்றால் நாடு நிலைக்கும் க்ஷேமத்தையும் விவரமாக எடுத்துக் கூறினான்.

புண்டரீகாக்ஷனே அந்தச் சட்டங்கள் இல்லாமையால் அநீதங்கள் அதிகமாகின்றன வென்றும், அவைகளை நிலை நிறுத்திவிட்டால் உலகத்துக்கு நன்மைவாய்க்குமென்றும்புகழ்ந்தான். அந்தச்சட்டங்களென்னவென்று விசாரிப்பீர்களேல், சொல்லுகிறேன் கேளுங்கள். இந்தியா தேசத்தில் குழந்தைகளை

* குறித்த அரங்கேற்றல் நிகழும் அக்டோபர்மாத நடுவில் நடந்துவிட்டதாகத் தெரியவருகிறது.—ப-ர்.

இளமைப்பருவத்தில் கலியாணம் செய்யக்கூடாதென்பதே. அப்படிச் செய்வதினால் பருவமடைவதற்கு முன்னமே சிலர் புருஷர்களை இழந்து கைம்பெண்களாக வாழ்நாட்களை பாயும்படுக்கையுமாக துக்கத்தில்மூழ்கியிறக்கின்றார்கள். ஆகையால்பன்னிரண்டுவயதுக்குட்பட்ட பெண்களுக்கும் பதினாறுவயதுக் குட்பட்ட ஆண்மக்களுக்கும் விவாகஞ் செய்யப்படாது. அப்படிச் செய்கிறவர்களைத் தண்டிப்பதற்காக ஏற்படுத்தப்போகிற சட்டத்தைப்பற்றி பேசிக்கொண்டார்கள். அச்சபையில் வந்திருந்த பிராமணர்களாகிய குருக்கள்மார், சாஸ்திரிகள், பட்டாசாரியர்கள் இவர்களெல்லாரும் ஆக்ஷேபனை சொல்லி அச்சட்டங்கள் இந்த ஊருக்கு அடாதென்று எதிர்த்தார்கள். ஆயினும் அச்சட்டங்களுண்டாகுமானால் இப்போது நடக்கும் அக்கிரமங்களெல்லாம் நீங்குமென்று ஒப்புக்கொண்டார்கள். எல்லாரும் பேசிமுடிந்தவுடன் ஞானசிகாமணியெழுந்து சொல்லத் தொடங்கினான். கனவான்களே! நானிவ்வூருக்கு அன்னியனாயிருந்தும், சில சங்கதிகளின் பொருட்டாக இங்கு அகஸ்மாத்தாக வந்தேன். வந்தவிடத்தில் நீங்கள் பேசிக்கொண்டிருக்கும் விஷயங்களையும் அவைகட்கு மாறாகப் பிராமணர்கள் ஆக்ஷேபங்கள் செய்த அம்சங்களையும் செவியுற்றேன். இப்போது நடந்தேறுகின்ற விவாகமானது பிராமணர்களுக்குள் முக்கியமாயிருக்கின்றது. அதை மற்ற ஜாதியாரும் இப்போது கைப்பற்றிக்கொண்டு சிறு குழந்தைகளுக்குத் தின் பண்டமான பதார்த்தங்களை கையிற் கொடுத்து தாலியைக் கட்டச் செய்கிறார்கள். பின் விளையப்போகிற கெடுதியைக் கவனித்தால் இவ்விதமான கலியாணத்தை யொருபோதும் நிறைவேற்ற எண்ணங்கொள்ளார். இப்போது மைசூர் மகா ராஜாவின் ராஜ்ஜியத்தில் இதைப்போன்ற ஒரு சட்டமேற்படுத்தினபின்பு சிறுவருக்கு மணம் புரிதல் நின்றுவிட்டது. நான் சிலநாட்களுக்கு முந்தி ஒரு ஊருக்குப் போனபோது ஆறுவயதுள்ள பெண் வந்தெனக்கு வேலைசெய்ய வந்தாள். அவளுடன் ஒரு கிழவியிருந்தாள்; அக்கிழவி தன் பேத்திக்கு மூன்று வருஷத்திற்கு முன் கலியாணமாகி இரண்டு மாதத்திற்கு முன்பு அவள் புருஷன் சொள்ளை நோயாலிறந்தான். இப்போது அவள் கைம்பெண்ணா யிருக்கின்றாளென்றும் விபரமாகச் சொன்னாள். அந்தச்சிறுமியை நான் கேட்டபோது தனக்கொன்றுந் தெரியாதென்று சொன்னவுடன் அந்தக்கிழவியைக் கூப்பிட்டு மறு மணம் செய்துவிட்டால் நல்லது என்று நான் சொன்னேன். அதற்கு அவள் தன் மோவாய்க்கட்டை மீது கைவைத்து இது எங்குஅடுக்கும்? எங்கள் சாதியிற் கொஞ்சமுங் கூடாதெனச் சொல்லிவிட்டு என் முன் நிற்காமலோடினாள். ஆகையினால் நமது நாடு க்ஷேமப்பட உங்களுக்கிஷ்டமிருக்குமாயின் இந்த விஷயத்தில் சீர்திருத்தம் அவசியம் வேண்டியதே என்று முடித்தான்.

விவேகசிந்தாமணி பின்பு எழுந்து தன் சகோதரன் சொல்லிய வொவ்வொரு வாக்கியமும் உண்மைக்குத்தாரமுள்ள தென்றும், தான் கொஞ்ச மாதத்திற்கு முன் ஓரிடத்திற்குப் போயிருந்தபோது அங்கு மணமொன்று நடந்தது. அதை விசாரிக்கப் புகுந்ததில் பெண்ணுக்கு எழு வயதென்றும், புருஷனுக்கு எட்டு வயதென்றும் சொன்னார்கள். பெண்ணைக் கலியாணம் செய்ததே தவிர மறுபடியும் புருஷன் முகத்தைப் பார்த்ததே யில்லை. இப்போது அந்தப் பெண்ணிற்கு தாசித்தொழிலாகிய ஆட்டம் பாட்டுகளைக்கற்பித்து வருகின்றார்கள். பெண் தன் கழுத்திலெவன் தாலிதரித்தானோ வென்று அதைக்கழற்றியெறிந்து விட்டாள். இந்த அநியாயங்களை நிக்கிரகிக்க ஓர் சட்டமவசியமே என உரைத்தான்.

பின்பு சபை கலைந்தது. ஒவ்வொருவராக வந்திருந்தவர்களில் புண்ணியசீலன், புண்டரீகாக்ஷன், சத்தியசந்தன், ஞானசிகாமணி, விவேகசிந்தாமணி இவ்வைவருந் தவிர மற்றவர்கள் போய் விட்டார்கள். இவர்களொருவருக்கொருவர் வேறு விஷயங்களைப் பற்றி சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் ஒரு சேவகன் வந்து சத்தியசந்தன் கையிலோர் கடிதம் கொடுத்தான். அக்கடிதத்தை அவன் வாசித்துப்பார்த்ததிசயித்து, அதை மற்ற இருவர்களாகிய புண்ணியசீலனுக்கும் புண்டரீகாக்ஷனுக்கும், காண்பிக்கவே அவர்கள் அதில் கண்டிருக்கிறதையறிந்துகொண்டு, உடனே ஞானசிகாமணியையும் விவேகசிந்தாமணியையும் நோக்கி நீங்கள் உண்மையைச்சொல்லமாட்டீர்களா? நீங்களிருவருமின்னாரென்றெங்களுக்குத் தெரியுமென்று சொல்லவே, உடனே அவர்கள் தங்கியிருந்த தர்பார்கூடத்தைவிட்டு வேறொரு அறைக்குட் புகுந்து அவர்கள் மேலணிந்திருந்த நிஜார், அங்கி, குல்லா இவற்றைக் கழற்றியெறிந்து பெண்கள் ரூபமாக அவர்களுக்கு முன் வந்து நாங்கள் புண்ணியசீல மகாராஜாவின் புத்திரிகளாகிய மரகதவல்லியும், சுந்தாவல்லியுமே. உம்மைக் கண்டு குணாதிசயங்களைத் தெரிந்து கொள்ளும்படி மாறு ரூபமாக வந்தோம், இனிமேல் எங்களிருப்பிடத்திற்குச் செல்லுவோமென்றார்கள். அதற்கவர்கள் எங்கள் தாய் தந்தையர்களிடம் வந்து அவர்களைக்கண்டு பின்பு உமதிருப்பிடத்திற்குச் செல்லுங்களென்று சொல்லி, பல்லக்கு கொண்டு வரச்செய்து அவர்களை யொருவருக்கும் தெரியாதுஅதிலேற்றி தாங்களும் தங்கள் குதிரைமேலேறிச் சென்றார்கள். சீக்கிரம் தன் தந்தையினுடைய அரண்மனை சேர்ந்து அங்கு தாதிமார்கள் பணிவிடை செய்ய, அன்னப்பட்சிகள்போலமர்ந்து கருடத்துவஜ மகாராஜன் பத்தினியாகிய லீலாவதி யினிடமிருந்தார்கள்.

பி. ஷண்முகசுந்தரம் பிள்ளை: பி. ஏ.

---

# TIT-BITS.

---

## வேடிக்கைக் கதைகள்.

(1) ஒரு பள்ளிக்கூடத்தில் ராமன் என்றபையன் கோவிந்தன் என்ற வேறொரு பையனிடத்தில் ஒரு கடிதத்தைக் கொடுத்து அதை வாசிக்கச் சொன்னான். அதில் "நீ ஒரு பெரிய முட்டாள்" என்று எழுதி யிருந்தது. கோவிந்தன் கொஞ்சம் கோபமுள்ளவனாகையால், உடனே தன்னுடைய மானேஜரிடத்தில் போய் ராமன் தன்னை முட்டாளென்று ஒரு கடிதத்தில் எழுதி யிருக்கிறதாயும், அது தனக்கு மானக்குறைவா யிருக்கிறதாயும் முறையிட்டான். இந்த வேடிக்கையைப் பார்க்கவேணுமென்று ராமன் இரண்டு தோழர்களைக் கூட்டிக்கொண்டு மானேஜரிடம் போனான். அப்போது மானேஜர் கடிதத்தில் எழுதி யிருக்கிற யாவற்றையும் வாசிக்கும்படியாய்க் கோவிந்தனிடத்தில் சொன்னதின்பேரில், அவன் "நீ ஒரு பெரிய முட்டாள்" என்று வாசித்தான். அதற்குராமன் "முட்டாளென்று" நான் எழுதினதற்கு கோவிந்தன் உங்களிடத்தில் முறையிட்டான். இப்போது நம்மைந்து பேர்கள் முன்பாக நீங்கள் கோவிந்தனைக் கொண்டு கடிதத்தை வாசிக்கச் சொன்ன வுடன், அவன் அதிகக்கோபத்துடன் உங்களைப்பார்த்து மரியாதை யன்னியில் நீ ஒரு பெரிய முட்டாளென்று சொன்னானே, உங்களைப்பார்த்து இப்படிச்சொல்லுகிறது எனக்கு அதிகக்குறைவாயிருக்கிறது. இதற்கு என்ன தீர்ப்பு." என்று சொன்னான்.

இதைக்கேட்டவுடன் யாவரும் கூடிச்சிரித்தார்கள். உடனே மானேஜரும் சிரித்துக் கொண்டு, பிள்ளைகளைத் தாங்கள் வந்தவழியைப் பார்த்துப் போகும்படியாகக் கட்டளை யிட்டார்.

(2) ஒரு ஊரில் ஒரு தனவானுக்கு இரண்டு புத்திரர்கள் இருந்தார்கள். அவர்களை வயதானவுடன் ஒரு பள்ளிக்கூடத்தில் கல்வி கற்கும்படி அவர் அனுப்பினர். அவர்களில் இளையவன் அதிக புத்தியுள்ளவனாகையால் நன்றாய் வாசித்துக்கொண்டு வந்தான்; மூத்தவனோ சொல்லிக் கொடுப்பதொன்றையும் கவனியாமல் விளையாடிக்கொண்டிருப்பது வழக்கம். ஒரு நாள் உபாத்தியாயர் மூத்த பிள்ளையை யழைத்து "நாலும் ஐந்தும் என்ன" என்று கேட்டார். அதற்குப்பையன் ஐந்து நிமிஷம் ஆலோசித்துக் கணக்கின் விடையைக் குறைத்துச் சொன்னால் உபாத்தியாயருக்குக் கோபம்

வருமென்று நினைத்து நாலும் ஐந்தும் (கூடுதலாகவே) பதினைந்தென்று சொன்னான். உடனே உபாத்தியாயருக்குக் கோபமுண்டாய் உன் தம்பியைக்கூட்டிக் கொண்டுவா, அவனைக் கேட்போமென்றார். அவன் தம்பியிடத்தில் போய் நாலும் ஐந்து மென்னவென்று கேட்க, தம்பி ஒன்பதென்றான். அதைக்கேட்டவுடன் மூத்தபையன் சிரித்து "நான் எவ்வளவோ கூடுதலாக பதினைந்து சொல்லியும், அவருக்கு மனது சமாதானமாகவில்லையே. உன்னுடைய ஒன்பதைக்கேட்டால் அவருக்கு வரப்பட்டகோபம் சொல்லிமுடியாதே என்று சொல்லி, அவனை உபாத்தியாயரிடத்துக்குக் கூட்டிக்கொண்டு போனான். போனவுடன், மூத்தபையன் உபாத்தியாயரைப் பார்த்து நான் பதினைந்தென்று சொன்னதற்குக் கோபித்துக் கொண்டீரே! இப்போது தம்பி நான் சொன்ன தொகையைப்பார்க்கிலும் குறைவாக ஒன்பதென்றுதானே சொல்லுகிறான். நீரே யார் கெட்டிக்காரரென்று தீர்மானித்துக் கொள்ளுமென்று சிரித்துக் கொண்டு சொன்னான்.

இதை வாசிக்கும் சிறுமிகளே! இதில் யார் கெட்டிக்காரரென்று நீங்களே அறிந்து கொள்ளலாம்.

3. "ட" "ல" என்கிற எழுத்துகள் ஏன் ஒரு தீவைப்போலிருக்கின்றன?

வி. கோபால அய்யங்கார் பி. ஏ.

---

## அன்னபூரணி கதை.

### 2-ம் அதிகாரம்.

### ஆண்டிச்சியம்மாள் சரித்திரம்.

(70-வது பக்கத்தொடர்ச்சி.)

முத்தையபிள்ளை ஆண்டிச்சியம்மாளின் சிகிச்சையால் சுகமடைந்த சங்கதியை விவரிக்குமுன் ஆண்டிச்சியம்மாளின் சரித்திரத்தை இங்கு சுருக்கமாய் சொல்வது நலமென்று தோன்றுகின்றது.

பாண்டிய நாட்டில் மதுராபுரிக்குச் சமீபமாய் வைகையாற்றோரத்தில் திருப்புவனம் என்றொரு சிறுநகரமுண்டு. அந்நகரம் பார்வைக்கு அழகில்லாத பல குடிசைகளுள்ளதாயினும் சிறப்பாய்க் கட்டப்பட்ட பல தேவாலயங்களும் ராமேசுவர ஸ்தலயாத்திரைசெய்யும் யாத்திரிகர்களுக்காகக்

கட்டப்பட்டிருக்கும் விஸ்தாரமான பல் சத்திரங்களும் அங்கே உண்டு. இவைகளுள் அந்நகரத்தின் மேற்புறத்து சுமார் கால் மயில் தூரத்தில் அலங்காரமாய்க் கட்டப்பட்டிருக்கும் **முத்துசுவாமிப்பிள்ளை** சத்திரம் மிகவும் பேர்பெற்றது. இந்தச் சத்திரமும், அதைச்சுற்றியிருக்கும் விஸ்தாரமான தோட்டமும், அந்நகரில் பெரியதனவந்தராகிய **முத்துசுவாமிப்பிள்ளை** என்பவருக்குச் சொந்தமானவை. இவர் வைசிய குலத்தில் காரைக்காட்டு வெள்ளாளர் வம்சத்தைச்சேர்ந்தவர். இவருக்குத்திரண்ட சம்பத்து செல்வாக்கு முதலிய சகல பாக்கியங்களுமிருந்தும், பிள்ளை பாக்கிய மொன்றில்லாக் குறையால் மனவருத்தமடைந்திருந்தார். இதற்காக மிகுந்த திரவியத்தை வைத்தியர்களுக்கிறைத்தது மன்றிப் பிராமணருக்கும், புரோகிதருக்கும், ஜோசியருக்கும், அன்னதானம், சுவர்ணதானம், வஸ்திரதானம், கோதானம், பூதான முதலியவுஞ் செய்தார். பற்பல மதஸ்தரான ஏழைகளுக்குத்தான தர்மம் செய்ததோடு தேவாலயங்களுக்கும் வேணடியபணம் செலவழித்தார். கடைசியாக நாம் முன்சொன்ன விஸ்தாரமான சத்திரத்தையுங் கட்டுவித்தார். இது யாத்திரிகரான பல ஜாதிக்காரரும் வலதியாய்த் தங்கிப்போகத்தக்க சௌகரியமான பல அறைகளுள்ளது. இதில் ஏழைகளுக்குச் சாப்பாடு முதலிய கொடுக்கத்தகுந்த ஏற்பாடுகள் செய்திருந்ததுடன், அவ்வேற்பாடுகள் சரிவர நடந்து வருகிறதாவென்று தானே நேரில் பார்த்தும் வருவார். இப்படி யிருக்கையில், ஒருநாள், இங்கிலீஷ்டாக்டர் ஒருவர் **இராமநாதபுரம் மகாராஜாவாகிய சேதுபதிக்கு** வைத்தியஞ் செய்துவிட்டுத் திரும்புகாலையில் முத்துசுவாமிப்பிள்ளை சத்திரத்தில் இரண்டொருமணிநேரம் தங்கியிருக்க நேரிட்டதால், அவரைக்கண்டு பேச **முத்துசுவாமிப்பிள்ளைக்கு** சாவகாசம் வாய்த்தது. முத்துசுவாமிப்பிள்ளைக்கு பிள்ளையில்லாத சங்கதியை டாக்டர் துரை தெரிந்து, அவரை நோக்கி நீரும், உமது மனைவியும் சிறிது காலம் சென்னப்பட்டணம் வந்திருப்பீர்களானால் என்னால் கூடியபிரயாசை யெடுத்து சிகிச்சை செய்கிறேன். ஈசுவரச் செயலாய் அனுகூலமாகு மென்று எனக்கு நம்பிக்கை யிருக்கிறதென்றார். முத்துசுவாமிப்பிள்ளை அதற்குச் சம்மதித்துத் தன் மனைவியிடமாலோசித்துக் கடிதமெழுதுவதாகச் சொல்லி வேண்டிய உபசாரங்களுஞ் செய்து டாக்டரை அனுப்பிவிட்டார். மறுநாள் தன் **மனைவி தாயம்மாளிடத்தில்** டாக்டர் சொன்ன சங்கதியைச் சொல்லவும், அவள் கோபித்துக் கொண்டு வைத்தியர்களுக்குச் செலவழித்த பணம் போதாதென்று இன்னும் பட்டணம் போகச் சொல்லுகிறீர்கள்? வெள்ளைக்காரன் கையைப்பிடித்துப்பார்த்து அவன் கையினால் மருந்து வாங்கிச் சாப்பிடுகிறதா ? மாட்டுத்தோல் ஊறப்போட்ட தண்ணீரைக்

கொடுப்பதாகச் சொல்லுகிறார்களே! இதென்ன கர்மம்! தலையெழுத்து வீண் போகுமா; என்னால் வரமுடியாது, நீங்கள் இஷ்டமானால் போங்களென்று அநேகவிதத்தடைகள் சொன்னாள். முத்துசுவாமிப்பிள்ளை அந்தத்தடைகள் எல்லாவற்றையும் ஒருபக்கத்தில் வைத்துவிட்டுப் பயணத்துக்கு வேண்டிய முஸ்திப்புகள் செய்து குரங்காட்டி குரங்கை யிழுத்துக்கொண்டுபோவது போல தாயம்மாளை யிழுத்துக்கொண்டு பட்டணம் போய்ச் சேர்ந்தார். டாக்டர்துரை இவர்களுக்காக பெரியவீடுதயார் செய்திருந்தது மன்றி, இவர்களை அழைத்துப் போகும்படி தம்முடைய மனைவியையும் கூட்டிக்கொண்டு ரெயில்வேஸ்டேஷனுக்கு வந்திருந்தார். தாயம்மாள் வண்டியைவிட்டு இறங்கவும் நாகரீகமற்ற அவளுடைய உடை நடைகளையும், நகை வகைகளையும் பார்த்தது ஸ்டேஷனில் அநேக ஜனங்களுக்கு விநோதமாயிருந்தது. காது வடித்துக் கழுத்து வரைத் தொங்கவிட்டு அரைடசனுக் கதிகமான தங்கவளையங்களை உருட்டித்திரட்டிப் போட்டிருந்தது. இது தவிர ஒவ்வொரு காதிலும நாலைந்து இடங்களில் துவாரம்பண்ணி, அவைகளில் சிறிதும் பெரிதுமான சில நகைகளுந் தொங்கவிட்டிருந்தது. மூக்கையும் விட்டுவிடவில்லை. அதிலும் மூன்று துவாரம் போட்டு சிலவற்றைத் தொங்கவிட்டிருந்தது. கழுத்தில் உட்கட்டும் பட்டைக் காறையும், கையில் கடகமும் சரிவும் முழங்கைக்கு மேல் தோட் காப்பு கொந்திக்காயும்; காலில் பாடகம் தண்டையும், விரல்கள் ஒவ்வொன்றிலும் சில வெள்ளி நகைகளும் பின்னும் பலவித கோரணிகளும் அணியப் பட்டிருந்தன. சிலர், அம்மம்மா! இந்தக்காதை இவ்வளவு லேசான தண்டாய் வளர்த்து இவ்வளவு பாரமான வளையங்களைப் போட்டிருக்கிறதே! காது அற்றுப்போகாதா வென்றும், சிலர் காதில் இவ்வளவு துவாரங்கள் என்னமாய்ப் போட்டுவிட்டார்கள்! இந்த அம்மாள் என்னவேதனைப் பட்டிருப்பாள்! ஐயோ பாவமென்றும், சிலர் மூக்குக்குள்ளே துவாரம் போட்டிருக்கிறார்களே அடங்காப்பிடாரி போலிருக்கிறது. பிடாரித்தனம் பண்ணும்போது கயிறுபோட்டு இழுப்பார்கள் போலிருக்கிறதென்றும், சிலர் ஒருவேளை அது சரியாயிருக்கும், ஏனென்றால் காலிலேயும் எங்கேயாவது ஓடிப்போகாதபடி வெள்ளி விலங்குபோல ஒன்று மாட்டியிருக்கிறதென்றும், இப்படிப் பலவிதமாய்ப்பேசி நகைத்தார்கள். டாக்டர் துரையும் துரைசானியும் இவர்கள் சமீபத்தில் வரவே வேடிக்கை பார்த்து நின்ற கூட்டம் ஒருவாறு விலக துரை முத்துசுவாமிப்பிள்ளையின் கையைப் பிடித்துக் குலுக்கி காலை வந்தனம் சொன்னார். துரைசானி தாயம்மாளைச் சமீபிக்கத் தாயம்மாள் பூனையைக்கண்டு எலிபதுங்குவது போல் ஒருபக்கமாய் ஒதுங்கி, நீட்டப்பட்டிருந்த துரைசானியின் கையைப் பிடியாமல் கீழுமேலும் பலவிசை பார்த்துக் கடைசியாய்த் தன் கணவரின் முகத்தைப்

பார்க்க அவர் வந்து துரைசானியை நோக்கி, அம்மா! என்மனைவி இதுவரை வெள்ளைக்காரத் துரைசானிமாரோடு பழகாதவளாயிருப்பதால் கூச்சப்படுகிறாள், அதைத் தாங்கள் தயவாய் மன்னிக்க வேண்டுமென்று சொல்லித் தன் மனைவியிடம் போய் டாக்டர் துரைசானிக்கு ஏன் கைகொடுக்கவில்லையென்று அன்பாய்ப் பேசி கைகுலுக்கும்படி செய்தார். துரைசானி அன்பான குளிர்ந்த முகத்தோடு தாயம்மாளைப் பார்த்து, நான் உன் சிநேகிதியல்லவா, என்னைக்கண்டு ஏன் கூச்சப்படுகிறாய் என்று சந்தோஷமாய்ப்பேசிக் கையைப் பிடித்துக் கூட்டிக்கொண்டுபோய் தன்னுடைய சாரட்டுவண்டியில் தன் பக்கத்தில் உட்கார வைத்துக்கொள்ள முத்துசுவாமிப் பிள்ளையும் டாக்டர் துரையும் இன்னொரு வண்டியிலேறி வர, எல்லாரும் இவர்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருந்த பங்களாவிற்போய் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்து பின்னர் துரைசானி முத்துசுவாமிப்பிள்ளையையும், அவர் மனைவியையும் பார்த்து நீங்கள் தூரமான இடத்திலிருந்து பிரயாணம் செய்துவந்திருக்கிற படியால் இளைப்பாறுங்களென்று சொல்லி, தங்கள் பங்களாவிற்குப் போய்விட்டார்கள். அவர்கள் ஏறக்குறைய மூன்று மாசம் பட்டணத்தில் டாக்டர் துரையாலும், துரைசானியாலும் அன்பாய் உபசரிக்கப் பட்டார்கள். டாக்டர் துரை கவலையோடும் ஊக்கத்தோடும் பலவிதமருந்துப் பிரயோகங்கள் செய்ததின் பேரில் முத்துசுவாமிப் பிள்ளையும் அவர் மனைவியும் சந்தோஷப்படத் தக்கதாய் அவர்கள் போனகாரியம் அனுகூலமாயிற்று. தாயம்மாள் ஈசுவரகடாக்ஷத்தால் கற்பவதியானாள். இச்சந்தோஷ சங்கதியைத் தங்கள் பந்துக்களுக் கறிவித்தார்கள். தாயம்மாள் பட்டணத்திலிருக்கையில், துரைசானியின் அன்பான ஏவுதலினால் நாகரீகமற்ற அநேக நகைகளைக் கழற்றிவிட்டதுமன்றி அவைகளுக்குப் பதிலாக வேறு நல்ல நகைகள் செய்து கொண்டாள். வடித்திருந்த காதைமுதலாயறுத்துச் சிறிதாக்கிக் கம்மல் செய்து போட்டுக் கொண்டாள். நல்ல புடவை ரவிக்கையிலும் அவளுக்குப் பிரீதி வந்துவிட்டது. இவ்விதமாகத் தாயம்மாள் பட்டணத்திற்கு வந்ததில் புதுமனுஷியாய் மாறினதைப் பார்த்து அவள் கணவனும் சந்தோஷமடைந்தார். இனி ஊருக்குப் போகவேணுமென்று ஆசை உண்டாகவே தங்கள் பிரிய சிநேகிதர்களாகிய துரையிடத்திலும், துரைசானியிடத்திலும் உத்தரவு பெற்றுக் கொண்டு, அவர்களுக்குச் செய்ய வேண்டிய மரியாதைகளும் செய்து விட்டு ஊர் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் ஊர்வந்து சேர்ந்த 9-வது மாசத்தில் சரியான காலத்தில் தாயம்மாள் அழகிய பெண்குழந்தை ஒன்றைப் பெற்றாள். குழந்தைபிறந்தவுடன் அந்நகர முழுவதும் பறைசாற்றுவித்து எல்லாரும் சந்தோஷங் கொண்டாட

பிராமணர்களுக்கும், ஜோசியருக்கும் வெகுமதியளித்து, அநேகம் ஏழைகளுக்கும் தான தர்மம் செய்தார்கள். டாக்டர் துரை தங்களுக்குச் செய்த உபகாரத்திற்காகவும் துரைசானிபேரிலுள்ள அன்பிற்காகவும், அந்தப் பிள்ளைக்கு **ரோசம்மா** வென்று அந்தத் துரைசானியின் பெயரை யிட்டார்கள். ரோசம்மாள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து ஐந்து வயதுப் பெண்ணானாள். ரோசம்மாளுக்குப் பிற்பாடு, தாயம்மாளுக்கு இரண்டு ஆண்பிள்ளைகள் பிறந்து இரண்டு மிறந்து போனபடியால், தாயுந் தகப்பனு மிந்த ஒரே பெண்ணின் பேரில் எவ்வளவு அன்பாயிருந்தார்களென்று சொல்லவும் வேண்டுமா! அன்பு அதிகப்படவும் பிள்ளைக்குக் கல்லியாணஞ் செய்து அழகும் குழகுமாய்ப்பார்க்க வேணுமென்கிற அபிலாசையும் அதிகப்பட்டுவிட்டது. பல இடங்களிலும் மாப்பிள்ளைதேட ஆரம்பித்தார்கள். நம்முடைய தேசத்தைப் பிடித்திருக்கிற சனியன்களில் இந்த **பால விவாக**மும் ஒன்று. பால்குடிமறக்காத பச்சைப் பிள்ளைகளுக் கெல்லாம் கலியாணம் செய்துவிடுகிறார்கள். சிசுவிவாகம் முக்கியமாய் பிராமணருக்குள்ளே நடந்து வருகிற தென்றாலும் அந்த நாகரீகமற்ற வழக்கம் மற்ற ஜாதிக்குள்ளும் நாளடைவில் அதிகரித்து வருகிறது. இதெப்படி யிருக்கிறதென்றால், தற்காலத்தில் சில ஜாதிக்காரர் பூணூல் போடுவதினால் தங்களைப் பெரிய ஜாதிக்கார ரென்று மற்றவர்களெண்ணிக் கொள்வார்களென்று எண்ணி அங்ஙனம் தரித்துக் கொள்ளுவதுபோலுமாம். பால்ய கலியாணம் நடத்திவந்தால் தங்களைப் பெரிய ஜாதிக்காரராகப் பிறர் மதிப்பார்களென்ற மூட எண்ணமே யொழிய வேறல்ல. "படிக்கிறது ஞானம் அறுக்கிறது தாலி" யென்பதுபோல படிப்பாளிகள் முதலாய் பால்ய விவாகங்கள் தவறு என்று பிரசங்கித்து விட்டுத் தங்கள் பிள்ளைகளுக்குச் சிறுபிராயத்திலேயே கல்யாணம் செய்து விடப்பார்க்கின்றார்கள். பால்ய விவாகங்கள் எங்கே அதிகமாய் நடந்துவருகிறதோ, அங்கே விதவைகளுமதிகம். இன்னும் ஜோஸியர்கள், புரோகிதர்கள் வீட்டிலதிகம். இவர்கள் இவ்விவாகங்களை முன்னின்று நடத்து விப்பதினால், கடவுளால் கொடுக்கப்பட்ட தண்டனை போலும்! தகப்பன் மாரே! தாய்மாரே! பெரியோரே! இந்தப் பாலிய விவாகங்களை யெப்போது துலைப்பீர்கள்! உங்கள் வயிற்றிற் பிறந்த அருமையான பிள்ளைகளை உங்கள் சொந்தக்கைகளால் கிணற்றில் தள்ளுகிறீர்களே! உங்கள் வீடுகளை ஏன் விதவைகளால் நிரப்புகிறீர்கள்? உங்கள் சாந்தப் புத்தியையேன் கையாடக்கூடாது? அண்டை வீட்டாருக்கும், அடுத்த வீட்டாருக்கும், ஊராருக்கும், பந்து ஜனங்களுக்கும் ஜாதியாருக்கும் பயப்பட்டு உங்கள் பிள்ளைகளைக் கெடுத்துப் பின்னால் அவமானத்திற்கும் இலச்சைக்கும் ஆளாக்காதேயுங்கள்.

**ஓர் மாது.**

## விக்டோரியா மகாராணியின் இளம்பருவத்தைப்பற்றிய கதைகள்.

உண்மைபேசுதல் :—மகாராணியார் ஒருதினம் நாயுடன் விளையாடப்போனார். அப்பொழுது நாய்வளர்ப்பவன் அதனிடத்தில் போகவேண்டாம். அது கடிக்கும் என்று சொன்னான். குழந்தைகள் ஒரு காரியம் செய்யும்பொழுது அதைச்செய்யாதே என்று அதட்டியாவது நலமாகவாவது சொன்னால குழந்தைகள் பிடிவாதமாய் அக்காரியத்தையே செய்யமுயலும். அம்மாதிரியாகவே நமது மகாராணியாரும் பிடிவாதமாய் அந்த நாயுடன் விளையாடிக்கொண்டிருந்தார். அப்பொழுது அந்த நாய் மகாராணியாரின் கையை மெதுவாக கடித்தது. உடனே நாய் வளர்ப்பவன் மகாராணியாரை நாய் கடித்ததென்று மிகப்பயந்து வருத்தப்பட்டுக்கொண்டு நாய் கடித்ததாவென கேட்க, மகாராணியார் "ஆ! நீ சொன்னதுசரி. நான் செய்தது பிசகு ஆனால் அது என்னைக்கடிக்கவில்லை—அது எனக்கு எச்சரிப்பு செய்தது. இனி நான் ஜாக்கிரதையாயிருப்பேன். உனக்கு வந்தனம்" என பதில் சொன்னார்.

6. மகாராணியார் குதிரைசவாரி செய்வது வழக்கம். குதிரைசவாரி செயயும்பொழுது வழியில் போகிற ஜனங்களைப்பாத்து "காலைவந்தனம் ஐயா, ஷேமமா" என கேட்பார். உடனே ஜனங்கள் மகாராணியாரின் கையைப்பிடித்து முத்தம் கொடுப்பார்களாம்.

## திருவள்ளுவ நாயனார் மனைவியாராகிய வாசுகியம்மாளின் சரித்திரம்.

என் அருமைச் சகோதரிகளே! நம்முடைய அறிவின் விருத்திக்காக சென்னையில் உதித்து உலவிவருகின்ற "மாதர் மனோரஞ்சனியை வாசித்துவரும் நாம் யாவரும், வாசுகியம்மாளின் நடக்கையைப் பின்பற்றி உலகில் க்ஷேமமடைவோமென்று எண்ணி அந்தம்மாளின் சரித்திரத்தை எழுதலானேன்.

> "வேழமுடைத்துமலைநாடுமேதக்க
> சோழவளநாடுசோறுடைத்து-பூழியர்கோன்
> தென்னாடுமுத்துடைத்துதெண்ணீர்வயற்றொண்டை
> நன்னாடுசான்றோருடைத்து."

மலைநாடு யானைகளை உடைத்தாயிருக்கிறதென்றும், சோழநாடு சோற்றை உடைத்தாயிருக்கிறதென்றும், பாண்டியநாடு முத்தை உடைத்தாயிருக்கிறதென்றும், நீர்வளம்பொருந்திய தொண்டைநாடு அறிவில் மேம்பட்ட பெரியவர்களை உடைத்தாயிருக்கிறதென்றும் நமது அன்னையாராகிய ஔவையார் சொல்லியிருக்கிறார்கள்.

முதற்கூறிய மூன்று நாடுகளும் நீங்க கடையிற் கூறிய தொண்டை நாட்டில், காவேரிபாக்கம் என்னும் ஓர் ஊர் உண்டு. அதில் ஆயிரம் ஏர் வைத்துக்கொண்டு உழுது பயிர் செய்து வசித்து வந்த மார்க்கசகாய னென்னும் ஒரு வேளாளர் இருந்தார். அவர் மிக்க செல்வவந்தராய் வாழ்ந்துவருங்காலத்தில், அவருக்கு அருந்ததிக்கொப்பாகிய கற்பிற்சிறந்த ஒரு பெண்மணி பிறந்தாள். மார்க்கசகாயர் தன் அரும் பெறற் செல்வ மகளாகிய அப்பெண்மணிக்கு வாசுகி யென்னும் பெயரையிட்டு நாளொரு மேனியும், பொழுதொருவண்ணமுமாக வளர்த்து வர வளர்ந்து, தன் இளம் பருவங்கடந்து மணத்துக்குரிய பருவமடைந்திருந்தனள். அந்தம்மாளுக்கு மணத்துக்குரிய பருவம் வளர்ந்து வந்தது போலவே, அந்தம்மாளுடைய கற்பின் மணம் வீசக்கூடிய நல்ல குணங்களும் கூடவே வளர்ந்து வந்தன. இது இப்படியிருக்க தொண்டை நாட்டில் ஒரு வேதாளந் தோன்றி, பயிர்களை அழித்து வந்ததுமல்லாமல் உயிர்களைக் கொன்றும் பலவித துன்பங்களைச் செய்து வந்தது. இதைக்கண்ட வாசுகி யம்மாளின் தகப்பனாராகிய மார்க்கசகாய ரென்பவர், அந்த வேதாளத்தை அடக்குபவருக்கு அதிக திரவியமும், ஊரும், இன்னும் வேண்டியவைகளும் கொடுப்பதாக தெரிவித்திருந்தார். அதை அடக்குவதற்கு ஒருவராலும் ஆகாமலிருந்தது.

**அம்மாகண்ணு அம்மாள்.**

(இன்னும் வரும்.)

---

# NEWS & NOTES.

காஞ்சிபுரத்தில் ராய்பஹதூர் நாராயணசாமி முதலியாரவர்கள் ஏற்படுத்திய பெண் பாடசாலையில் 200-பெண்களுக்கதிகம் படித்துவருவதைக் கேட்க சந்தோஷப் படுகிறோம்.

---

பனி நிறைந்த மலைகளில் ஏறுவதில் சாமர்த்தியமுள்ள மூன்று ஐரோப்பியர்கள் இமயகிரி மலையை எதிப்பார்ப்பதற்கு சுவிஸ்ஜர்லண்ட் என்னும் மலை நாட்டிலிருந்து வந்திருக்கிறார்களாம்.

---

பெசிபிக் மகா சமுத்திரத்தில் கிரேம தீவில் இம்மாதம் 11-உல் பூகம்ப முண்டானதாம். அம்மளா பட்டணம் முழுவதும் அழிந்துபோனதும் தவிர (4000) நாலாயிரம் ஜனங்களும் மரித்துப்போனார்களாம்.

---

அமெரிக்கர்கள் உலகத்தில் பெரிதான ஒரு பீரங்கியைச் செய்திருக்கிறார்களாம். அதன் துவாரம் 16-அங்குலம் அளவுள்ளதாம். அதன் கனம் 126-டன். அதினின்றும் சுடப்படக்கூடிய குண்டின் கனம் 2370-பவுன். இதுவரையில் குண்டுகள் பீரங்கியிலிருந்து பன்னிரண்டரை மைலுக்கதிகம் செல்லுவது கிடையாது. ஆனால் அமெரிக்காவில் இப்பொழுது நூதனமாய் செய்யப்பட்ட பீரங்கியிலிருந்து குண்டானது 9-மைல் ஜாஸ்தி செல்லுமாம்.

நமது சஞ்சிகையில் சாவித்திரீ சரித்திரம் எழுதுபவரும் கடலூர் காலேஜில் சமஸ்கிருதபண்டிதராயிருந்தவரும், தற்காலம் திருவல்லிக்கேணி வெஸிலிபன்மிஷின் ஹைஸ்கூலில் உபாத்தியாயராகவிருக்கும் ம-ஸ்ரீ என். சாமிநாத சாஸ்திரியாரவர்கள் வித்வானாகிய சோமதேவர் இயற்றிய கதாசரித் சாகரம் என்ற சமஸ்கிருத கதையைத் தமிழில் மொழி பெயர்த்து நமக்கு அனுப்பியதை 113-வது பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம். இனி இக்கதை முழுவதும் நமது பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

---

பௌத்த மகாசாரியர் மிஸ்டர் தர்மபாலர் சென்னைக்கு வந்திருக்கிறார். அனேக விடங்களில் பிரசங்கமும் செய்துவருகிறார். இவர் இம்மாதம் 9-டல் கோமளீசுவரன் பேட்டையில் நடந்த மீடிங்கில் பேசினபோது, ஜப்பான் தேசத்தாரைப்பற்றி பின்வருமாறு சொன்னார். "ஜப்பான் தேசமானது இப்பூமியில் ஆனந்த ஸ்தலம். அத்தேசத்தார் மகா சுத்தமுள்ளவர்கள். சென்னையிலுள்ள தெருக்களைப்போலல்லாமல் அங்கு வெகு சுத்தியாயிருக்கும். இங்கு மிட்டாய் விற்பவர்கள் சாமான்களில் தூசி முதலியவைகள் விழும்படியாய் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்; மேலும் சாக்கடைக்கு மேல் அவைகளை வைத்துக்கொண்டிருப்பதினால் அதினின்றும் கெட்ட காற்று வெளிக்கு வந்து இவைகளில் சேருகிறது; அங்கு இவ்விதம் வைத்துக்கொள்ளாமல் மூடி வைத்துக்கொள்வார்கள். அவர்கள் வீடுகளும், உடைகளும், டண்டங்களும் படுக்கைகளும், கொஞ்சமேனும் அழுக்கில்லாமலிருக்கும். ஒருவர் வேறொரு வேலையில்லாமலிருக்கும்பொழுது சும்மாவிராமல் சண்சண்ட சாமான்களைக் கவலையோடு துடைத்து சுத்தம் செய்வார். கோயில்களைச் சுற்றிலும் நந்தவனங்களிருக்கும். கூலியாள்கூட ஒரு தினத்தில் இரண்டு தடவை ஸ்நாநம் செய்வான். வெகு மரியாதையுள்ளவர்கள். எஜமானன் தன் வேலைக்காரனிடத்தில் அதிக பக்ஷமாய்ப் பேசுவான். அனேகமாய் யாவரும் கல்வி கற்றவர்கள். பத்திரிகைகள் சுவல்ப விலைக்கு கிடைக்கும்.

---

வட அமெரிக்காவிலுள்ள கேலிபர்னியாவில் பெரிய பட்டணமாகிய சான்பிரான்சிஸ்கோவில் ஒரு பாடசாலையிருக்கிறது. இங்கு குழந்தைகள்தான் படிக்கலாம். இவர்களுக்கு சாப்பாடும் இங்கேயே கிடைக்கும். இதில் சுமார் 5000 பிள்ளைகளும் பெண்களுமிருக்கிறார்கள். சிலதினங்களுக்கு முன்பு புரொபஸர் எர்ல்பேரன்ஸ் என்பவருடைய யோசனையின்மேல் பின் வரும் கேள்வி கேட்கப்பட்டது. நீங்கள் சேட்ட அல்லது படித்திருக்கிற எந்த மனிதனை அதிகமாய் விரும்புகிறீர்கள்? இதற்கு பெண்களில் சிலர் நமது மகாராணியாரை எனச்சொன்னார்கள். அவர்கள் சொன்ன காரணமென்னவெனில் இதுவரையிலும் மகாராணியாரைப்போல் நல்லவராக ஒருவருமிருந்ததில்லையாம். மகாராணியாரைப்போல் நீடித்தகாலமும் வசிக்கவில்லையாம். திரளான திரவியமிருக்கிறதாம் தரித்துக்கொள்ள அழகானவும் விலையுயர்ந்தவுமான உடுப்புகளுமிருக்கின்றனவாம். மகாராணியார் குடிப்பதே கிடையாது வண்டி சவாரி செய்கிறார். போஜனம் செய்ய நேர்த்தியான ஆகாரமிருக்கின்றது, செய்ய வேலையில்லையென விரும்பினபொழுது வெளியில் நலல காற்றுக்காகப் போவாராம். நாள முழுவதும் வீட்டிலிருப்பதைப்போலவே, வெளியிலிருந்து வீட்டிற்குவந்தவுடன் எல்லாவேலையையும் சரிவர பார்க்கிறார்களாம். பிரின்ஸ் ஆப் வேல்ஸ் அதாவது மகாராணியாரின் இளவரசை 100-க்கு ஒருவர்தான் விரும்பினாராம் (அதாவது, 5000-ம் பிள்ளைகளுக்கு 50-பிள்ளைகள்) இதற்குகாரணம் வேல்ஸுக்கு ஏராளமான தங்கமும் வெள்ளியுமிருக்கின்றன. ஒரு நல்ல கிறிஸ்தவர் சந்துஷ்டியாய் வசிக்கிறார் என்று சொன்னார்கள்.

---